# Ash Collection ( 2nd or 3rd, 5th or 7th day Ritual)

After the cremation is done, the ash of the deceased is collected from the crematorium and immersed in the sea known as 'Asthi Sweekaranam' and ' Sanjayanam' respectively. It is believed that these ceremonies after cremation sanctify the soul that is departed as well as purifies the 'subtle' body (the invisible body inside the physical body) left behind which ultimately reaches the world of ancestors (Pithru Lokam).

## The three forms of Human Soul (Jiva)

The human body is divided into three forms. 'Body" here refers to the level of "self".

## Physical or astral body (Sthula Sariram)

With the human birth, the dense physical body known as 'Sthula sariram' comes into the physical world. This is also known as 'Astral body' which is filled with emotions and worldly desires.

The physical body is a mass of flesh, bone and marrow and also called as 'Annamaya Kosha'. In Sanskrit, 'anna' means food. It is said that the physical body is maintained by the food and drink that one takes. If one does not take meals for days together, one gets emaciated physically. The energy that is present in the vitality of the food is the source of the strength that is gained by the physical body.

When death happens the physical body becomes dead and the soul departs. The funeral rites are performed to sanctify the body awaiting to enter the world of 'pith us' (manes)

## Subtle or mental body (Sukshma Sariram)

The soft body, which is etheric, exists inside the physical body. The essence of one's inner self is represented by the 'subtle body' or 'Sukshma sariram', which is also known as 'Linga-sarira' meaning an insignia or a mark which is an indication of the energy or force inside the physical body of a man.

Just as the physical body is made up of the essence of the food that is consumed, the subtle body is constituted of many other factors such as 'Prana' (the breathing), the mind and the intellect.

When the soul leaves the physical body the 'soft body' or the 'Sukshma sariram' is left behind. The scriptures prescribe cleansing and purification ceremonies to be performed after the funeral rites to see that the body finally reaches the 'Pithru lokam' or the world of our ancestors.

## Casual Body or Spiritual body (Karana Sariram)

The body that is sanctified and ready to enter the 'Pithru Logam' (World of manes) is known as 'casual body' or 'Spiritual body'.

## Ashes Collection (Asthi Sweekaranam)

The 'Kartha' or the chief mourner who performed the funeral rites will go to the crematorium in the next morning with his close relatives (3 or 5 or 7 members) to collect the ashes. Instead of the next day, some families will collect the ashes on the 3rd, 5th or the 7th day.

The 'Kartha' has to wear the same 'Vasthram' (Dhoti and towel) used on the day of the funeral.
In Singapore, the funeral directors will book the Service Hall at the crematorium and bring all the necessary prayer items including the 'Pindams' (offerings).

**The procedure is as follows:**

**1. The body consisting of ashes and bones will be brought in the long metal tray.**

**2. The priest will perform the Kalasa Poojai. The 'Kartha' will wear the Poonool and the Pavithram***

**3). The Kartha will stand beside the head and will sprinkle water, followed by milk on the ashes three times.**

**4 A banana leaf will be spread near the head with the tip facing the South.**

**5. The bones will be picked from the head, neck, chest (vertebrae), the hands, the hip and the legs. They will be arranged on the leaf to form a human figure. The human figure represents the 'Sukshma Sariram' or the 'subtle body'**

**6. The remaining ashes and bones will be placed in a pot and packed tightly with a white cloth.**

**7. The Ganges water will be sprinkled (optional) followed by milk and water Abishegam for the human figure laid on the leaf.**

**8. An oil lamp and incense sticks will be lit.**

**9. The human figure will be adorned with Kungumam (vermillion powder), sandalwood paste. The 'Kartha" will then garland the figure.**

**10. The betel leaf, nut, and fruits are placed near the head.**

**11. ' Pindas' (offering) made of Rice, Agathee Keerai (cooked Sesbania leaves) and the boiled Kachang, the larger of the skinned, split, yellow dals known as Chana Dal or Chick peas or Garbanzo bean are spread on another banana leaf.**

**10. The 'Kartha' will go around the figure three times and then throw the flowers with prayers.**

**At the end, all the bones on the leaf will be also placed in a 'Satti" (Mud pot) and will be tightly packed in a dhoti.**

**The Kartha will carry this pot on his right shoulders and will it to the sea.**

## Immersing the ashes in the sea (Sanjayanam)

The Kartha will proceed to perform the "Sanjayanam" or immersing the ashes in the sea.
He will wear the same Pavithram and the Poonool and go to the seaside. Both in the crematorium and during the seaside prayers he must be in wet clothes.

A pail with water will be given to him before he takes the boat. The close relatives (mostly the siblings) will accompany him in the boat.

## Jala Sthambam (Prayers to the King of Ocean)

Special prayers will be performed for "Samuthra Raja', the King of all oceans called as "Jala Sthambanam". Then the "Kartha" will proceed with immersing the ashes (Sanjayanam) following the procedures below:

**1. The "Kartha" will open the dhoti (or white cloth) and hammer the ' Satti', the mud pot containing the ashes and the bones.**
**2. By reciting 'Govinda' and 'Namasivaya' he will leave the pot in the sea.**
**3. Once the pot is thrown, the Kartha should not look back to see it.**
**4. Once the Kartha reaches the seashore, he must wash his legs and throw away the Pavithram and Poonool into the sea. Also must sprinkle water on the heads.**
**5. The performer and others must have a dip in the sea and turn to East and offer a silent prayer to God to grant peace to the departed soul.**
**In Singapore, there are bathing facilities ( Car Park 6) in Changi beach for the Karthas who perform the seaside prayers.**
**Once reached home, the dhoti and the towel must be kept safely which are to be reused for the 16th day prayers.**

# அஸ்தியை எடுத்து கடலில் கரைத்தல் (அஸ்தி ஸ்வீகரணம்)

ஒவ்வொரு மானுட ஆத்மாவும் கட்டுடல், மெது உடல் மற்றும் வெற்றுடல் (ஸ்தூல, சூக்ஷ்ம மற்றும் காரண சரீரங்கள்) என்னும் 3 உடல்களைக் கொண்டது.

மனித ஆத்மா (ஜீவன்) ஒரு உடலிலிருந்து, மறு உடம்பிற்குச் சென்று மறு பிறப்பு எடுப்பதாக இந்து மதத்தில் நம்பப்படுகிறது. அப்போது இந்த 3 உடல்களும் மாறுதல்களை அடைகின்றன. ஒரு மனிதனின் வாழ்நாளில் அவன் செய்த காரியங்களும், அவனின் நடத்தையையும் பொறுத்து இம்மாறுதல்கள் நடைபெறும்.

'கட்டுடல்' அல்லது 'பூதஉடல்' மண்ணுக்குள் மறைந்து விடும். ஆனால் இறப்பிற்கு பின் 'ஆத்மா' அழிவதில்லை.

ஒவ்வொரு தடவையும் அவனுடைய நற்செயல்களைப் பொறுத்து உடம்பிற்குள் இருக்கும் 'மெது உடல்' அமையப் பெறும். 'ஆத்மா' அதில் உயிர்பெற்று பல பிறவிகளாகப் பூமியில் பிறக்கும். அது புழு, பூச்சியாக, மிருகம், பறவையாக அல்லது மற்றொரு மனித சரீரமாகக் கூடத் தோன்ற முடியும்.

### மனித ஆத்மா மூன்று வடிவங்கள்

மனித ஆத்மாவை மூன்று வடிவங்களாகப் பிரிக்கலாம். இங்கு 'வடிவம்' என்பது மானுட உடல் அடையும் இறுதிநிலையை அடிப்படையாகக் கொண்டு பிரிக்கப்பட்டுள்ளது.

### கட்டுடல் அல்லது ஸ்தூல சரீரம்

பிறக்கும்போது தோன்றிய எலும்பும் சதையும் நரம்பும் கொண்ட கட்டுடல் 'ஸ்தூல சரீரம்' என்றும் 'மானுட உடம்பு' என்றும் கூறப்படுகிறது. இது உணர்ச்சிகளும், உலகைப்பற்றிய ஆசைகள், வாழ்க்கையை ஒட்டிய கனவுகளைக் கொண்டது. இத்தகைய மனிதஉடலை "அன்னமய கோஷம்" என்றும் கூறுவர். 'அன்னம்' என்பதற்கு 'சோறு' அல்லது 'சாதம்' என்பது பொருள்.

மனித உடல் உண்ணும் உணவு, அருந்தும் பானங்களைப் பொறுத்து வளர்கிறது; உயிர் வாழ்கிறது. சில நாட்கள் தொடர்ந்து உணவு சாப்பிடாமல் இருந்தால் சாதாரண மனித உடம்பு வீணாகி விடும். உணவு மூலம் கிட்டும் சக்தியே மனிதனின் உடல் உறுதியை பெரும்பாலும் நிர்ணயம் செய்கிறது.

இறப்பிற்கு பின் 'மனித உடல்' உயிரற்ற சடலமாகி விடுகிறது. தமது இறந்த போன முன்னோர்கள் வாழும் பித்ருகள் லோகத்தை புனிதமாக அடையும் வகையில் நீத்தார் சடங்குகள் செய்யப்படுகின்றன.

## மெது உடல் (மானசீக உடல் அல்லது சூக்ஷ்ம சரீரம்)

மனிதனின் கட்டுடலுக்குள் அதாவது நமக்குப் புலப்படும் எலும்பு, தசை, நரம்புகளால் ஆன உடலுக்குள் நம் கண்ணுக்குத் தெரியாமல் அடங்கிக் கிடப்பதே 'மெது உடம்பு' ஆகும். இது 'சூக்ஷ்ம சரீரம்' என்று முனிவர்களால் கூறப்படுகிறது. 'லிங்க சரீரம்' - ஏதாவது ஒரு அடையாளத்தைக் குறிக்கும் உடல் என்றும் கூறப்படும். 'லிங்கம்' என்றால் 'அடையாளம்' என்று பொருள். மனித உடம்புக்குள் இருக்கும் சக்தியை அடையாளம் காட்டுவதே 'சூக்ஷ்ம உடல்' ஆகும்.

மனித உடம்பு எப்படி உண்ணும் உணவைப் பொறுத்து வளர்கிறதோ, அதுபோல உள்ளே இருக்கும் 'மெது உடம்பு' 'பிராணம்' அல்லது சுவாசம், சிந்தனை, அறிவாற்றல் இவற்றைப் பொறுத்து அமைகிறது.

மனித உடலை விட்டு ஆன்மா பிரிந்த பின், உள்ளே இருக்கும் 'மெது உடம்பு' தனியே விடப்படுகிறது. இறுதிச் சடங்கில் மனிதக் கட்டுடல் அழிந்தபின், 'மெது உடம்பு' பல வேதகாரியங்கள் மூலம் தூய்மையாக்கப்பட்டு நம் முன்னோர்கள் வாழும் பித்ரு லோகத்தை சென்றடைய வேண்டும் என்று சொல்லப்படுகிறது.

### ஆன்மீக சரீரம் (வெற்றுடல் அல்லது காரண சரீரம்)

ஆத்மா விட்டுப்பிரிந்து, கட்டுடல் எரிந்து அல்லது புதைத்து அழிக்கப்பட்டு பின் பல கர்மாக்கள் மூலம் புனிதம் அடைந்த எஞ்சியிருக்கும் வெற்றுடலே "ஆன்மீக சரீரம்" என்பதாகும். இது இறுதியில் இறைவனைச் சென்று அடையும்.

## ஆத்மசாந்தி நீத்தார் சடங்கு (2ஆம் நாள் சடங்கு)

### நீத்தார் இறந்தவரின் சாம்பலை எடுத்தல் (அஸ்தி ஸ்வீகரணம்)

இறந்தவரின் ஆத்மா பிரிந்தபின், ஆசைகளுடன் அலையக் கூடிய மெது உடலை ஆன்மீக அல்லது தெய்வீக சரீரமாகவும் மாற்ற பல சடங்குகள் செய்யப்படுகின்றன.

இறந்த அடுத்த நாள் அல்லது 3, 5 அல்லது 7ஆம் நாள் அன்று சாம்பல் மற்றும் எலும்புகளை எடுக்க "கர்த்தா" அல்லது "கொள்ளிவைத்தவர்" இடுகாட்டிற்குச் செல்வார். உடன் 3, 5 அல்லது 7 குடும்ப உறுப்பினர்கள் (ஒற்றைப் படை எண்ணிக்கையால்) செல்வார்கள்.

'கர்த்தா' இறுதிச் சடங்கின் போது அணிந்த அதே ஆடையை அஸ்தி எடுக்கும் அன்றும் அணிந்து சொள்வார்.

கீழ்கண்டவாறு அஸ்தி அல்லது சாம்பல், எலும்புகள் எடுக்கும் சம்பிரதாயம் பின்பற்றப்படும்.

1. கொள்ளி வைத்து சாம்பலான உடல் பெரிய நீளமான தகர டிரேயில் கொண்டு வரப்படும்.
2. "கர்த்தா" பூணூல் மற்றும் பவித்ரம் அணிந்து கலச பூஜை செய்வார்.
3. தலைக்குப் பின்னால் "கர்த்தா" நின்று சாம்பல் உடல் மீது தண்ணீர், பால் தெளிப்பார்.
4. வாழை இலை, ஒன்று நுனி தெற்குப்பக்கம் பார்த்து விரித்து தலைப்பக்கத்தில் வைக்கப்படும்.
5. தலை, கழுத்து, மார்பு, கைகள், இடுப்பு மற்றும் கால்களில் இருந்து எலும்புகள் பொறுக்கப்பட்டு வாழை இலையின் மீது மனித உருவம் போலவே வைக்கப்படும்.
6. மீதியிருக்கும் சாம்பலும் எலும்புகளும் ஒரு பானையில் போடப்பட்டு துணியால் இறுக்கிக் கட்டப்படும்.
7. கங்கை நீர் அல்லது வெறும் தண்ணீர், பால் எலும்புடலின் மீது தெளிக்கப்படும்.
8. எண்ணெய் தீபம், ஊதுபத்தி ஏற்றப்படும்.
9. எலும்பு உடலுக்கு குங்குமம், சந்தனம் இட்டு மாலை போடப்படும். இது 'சூக்ஷம உடலை' புனிதப்படுத்தும் சடங்கு.
10. வெற்றிலை, பாக்கு பழங்கள் தலைக்குப் பின்னால் வைக்கப்படும்.
11. வேகவைத்த வெள்ளை கொண்டைகடலை (கச்சாங்), அகத்திகீரை மற்றும் சோற்றினால் செய்யப்பட்ட மூன்று பிண்டங்கள் மற்றொரு வாழை இலையில் வைக்கப்படும்.
12. 'கர்த்தா' பின் எலும்புடலை மூன்று முறை வலம் வருவார். பூக்களைத் தூவி பிரார்த்தனை செய்தபின், மண்சட்டியில் எலும்புகளைச் சேர்த்து வேஷ்டியால் கட்டிவிடுவார்.

இந்த பூஜை செய்த எலும்புகள் நிரம்பிய பானையை வலது தோளில் வைத்துக்கொண்டு உறவினர்களுடன் கடலுக்குச் செல்வார்.

## அஸ்தியை (சாம்பலை) கடலுக்குள் கரைத்தல் (சஞ்சயனம்)

'கர்த்தா' பின் எலும்புகள் கொண்ட பானையுடன் சாம்பலைக் கடலில் கரைக்கும் 'சஞ்சயனம்' என்னும் கர்மாவைப் பண்ணவேண்டும். மயானத்திலும், கடலுக்குச் செலலும்போது ஈரவேஷ்டியுடன் 'கர்த்தா' இருப்பது அவசியம்.

கடலுக்குள் செல்வதற்கு முன்பாக 'கர்த்தா' பூனூலையும் பவித்ரத்தையும் அணிய வேண்டும். கடலுக்குள் செல்ல விசைப் படகு ஒன்று எற்பாடு செய்யப்படும். ஒரு வாளியில் தண்ணீர் பிடித்து எடுத்துச் கொள்வார்கள். நெருங்கிய உறவினர்கள் படகில் உடன் செல்லுவார்கள்.

# ஜல ஸ்தம்பனம் (சமுத்திராஜாவை வேண்டுதல்)

கடல்களுக்கெல்லம் அதிபதியான சமுத்திர ராஜாவைப் “ஜலஸ்தம்பனம்” படித்து வேண்டிக் கொண்டு “கர்த்தா” கடலுக்குள் அஸ்தியைக் கரைக்க வேண்டும்.

1. கட்டப்பட்டுள்ள வெள்ளைத் துணி அல்லது வேட்டியை அவிழ்த்து சுத்தியலால் மண்பானையை உடைத்து உள்ளே உள்ள எலும்புகளையும் சாம்பலையும் விழச் செய்வார்கள்.
2. பின் “கோவிந்தா” “நமசிவாயா” என்னும நாமங்களைச் சொல்லி பானையைக் கடலில் விடுவார்கள்.
3. பானையைக் கடலில் வீசிய பின் கர்த்தா அதை திரும்பிப் பார்க்கக் கூடாது.
4. பின்னர் கடற்கரையை அடைந்தபின் கர்த்தா கால்களை அலம்பிக் கொண்டு பவித்ரம், பூணூலைத் தூக்கி எறியவேண்டும்.
5. கர்த்தாவும் மற்றவர்களும் கடலுக்குள் மூழ்கி எழுந்து கிழக்குப் பக்கம் பார்த்து நின்று அமைதியாகப் பிரார்த்தனை செய்யவேண்டும்.

சிங்கப்பூரில் சாங்கி கடற்கரையில் கார்நிறுத்தும் இடம் எண்: 6ல் (Car Park 6) குளிப்பவர்களுக்கான வசதி செய்யப்பட்டுள்ளது. குளித்துவிட்டு வீடு சென்று பின் அதே வேஷ்டியையும், துண்டையும் 16ஆம் நாள் பிரார்த்தனைக்கு எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும்.